இணைப்பு I

[2 9 ம் பக்கத்தில் 156-ம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

தேசிய மாணவர் படைக்காகச் செலவிடப்படும் தொகையில் கீழ்க்கண்ட இனங்களுக்கான செலவினை மைய அரசு ஏற்று வருகிறது:—

(1) தேசிய மாணவர் படை இயக்குநரின் அலுவலகத்திற்கான இடவசதி அல்லது வாடகையும், நாற்காலி, மேசை முதலியன ;

(2) தேசிய மாணவர் படையில் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக அனுப்பப்படும் இராணுவ அலுவலர்கள், அலுவலக பணிக்காக அனுப்பப்படும் இராணுவ அலுவலர்கள், அலுவலக பணிக்காக அனுப்பப்படும் இராணுவத்தின் இதர மைய அரசு ஊழியர்கள் ஆகியோரின் ஊதியச் செலவுகள்;

(3) பயிற்சிக்கான உந்து வண்டிகள்;

(4) மாணவர் படையினரின் உடை முதலியன;

(5) போர்த்தளவாடங்கள் மற்றும் விஞ்ஞான நுட்பவியல் கருவிகள்.

2. மாநில அரசு ஏற்றுவரும் செலவினங்கள் பின் வருமாறு:—

(1) இயக்குநர் அலுவலகம் நீங்கலாக மற்றைய தேசிய மாணவர் படை அலுவலகங்களுக்கான இடவசதி, நாற்காலி, மேஜை வகையறாக்கள் ;

(2) எழுது பொருள்கள் ;

(3) பெட்ரோல், எண்ணெய், மசகு;

(4) தேசிய மாணவர் படை அலுவலகங்களில் பணிபுரியும் சிவிலியன் அலுவலர்களுக்கான ஊதியம்;

(5) படையைச் சேர்ந்த மாணவர்களுக்கும் அலுவலர் களுக்கும். படி;

(6) தேசிய மாணவர் படைக்கான இதர வசதிகளுக்கும் பயிற்சிக்கும் பொருளுதவி (விமானம் மற்றும் கப்பல் மாதிரி கருவிகள் வாங்குதல் போன்ற செலவுகள்).

3. இவையன்றி பயிற்சி முகாம்களுக்கு செலவிடப்படும் தொகையை மைய அரசும் மாநில அரசும் சரிபாதியாக பங்கேற்றுக் கொள்ளுகின்றன.

4. தேசிய மாணவர் படைக்காக ஆண்டொன்றுக்கு சுமார் 65 லட்ச ரூபாய் தமிழக அரசு ஒதுக்கி வருகிறது. மொத்தச் செலவில் இத்தொகை 35 சதவீதமே. மீதி 65 சதவீத செலவினை மைய அரசு ஏற்று வருகிறது.